# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066910

1. District மாவட்டம் : நீலகிரி
PS காவல்நிலையம் : V&AC
Year ஆண்டு : 2020
FIR No மு.த.அ. எண் : 01
Date நாள் : 29.02.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Crpc. — Sections பிரிவுகள்: 102
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 29.02.2020 — Date to : நாள் வரை —
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 17.00 to 20.00 — Time to : நேரம் வரை —
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.02.2020 — Time நேரம் : 16.00
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time நேரம் :

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — உதகை நகராட்சி அலுவலகம், பொது சுகாதார பிரிவு சுமார் 1½ km, மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — M. பிரகாஷ்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் — இந்தியன்
(e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — பொறுப்பு மாவட்ட ஆய்வு குழு அலுவலர்
(g) Address : முகவரி — மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) S. பாஸ்கரன் 2) K. தியாகராஜன் 3) R. ஞானசேகரன் - சுகாதார ஆய்வாளர்கள்
4) K. வேணுகோபால் - சுகாதார மேற்பார்வையாளர் 5) G. சக்திவேல் - இளநிலை உதவியாளர்
நகராட்சி அலுவலகம், உதகமண்டலம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கபட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Geethalakshmi
29/2/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
29/2/2020

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை .....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
கா.தி.க. பிரிவு, நீலகிரி மாவட்டம்.

15. Date & Time of despatch to the court: 02.03.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

**ஊ.த.க.பிரிவ கு.எண்.1/2020/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:-**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 29.02.2020-ம் தேதி சுமார் 21.00 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.H.பிரகாஷ் அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர் பொருள்: திடீர் தணிக்கை - நடவடிக்கை கோருதல் - சம்மந்தமாக. இன்று (29.02.2020) 16.00 மணிக்கு நீலகிரி மாவட்ட ஆட்சியர் எனக்கு அளித்த உத்தரவின் படி உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் மற்றும் பார்ட்டி சகிதம், உதகமண்டலம் நகராட்சி அலுவலகத்திலுள்ள பொது சுகாதார பிரிவு அலுவலர்களும், சுகாதார ஆய்வாளர்களும் உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள மளிகை கடைகள், சில்லறை கடைகள், பேக்கரிகள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், ஆவின் பூத்கள், துணிக்கடைகள் மற்றும் சில்லரை விற்பணை கடைகள் ஆகியவற்றிற்கு அச்சம் மற்றும் அருவறுக்கத்தக்க சான்றிதழ் (D & O License) பெற இன்று 29.02.2020 கடைசி நாள் என்பதால், மேற்கண்ட

Geethalakshmi
29/2/2020

ஸ்தாபனங்களின் உரிமையாளர்களிடம் லஞ்சம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் உதகமண்டலம் நகராட்சி அலுவலக வளாகத்தில் இருக்கும் பொது சுகாதார பிரிவு அலுவலகத்தை இன்று (29.02.2020) 17.00 மணிமுதல் 20.00 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம். இந்த திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,03,200/- சரியான முகாந்திரம் கூற இயலாததாலும், D & O License பெற வந்தவர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அங்கிருந்த சுகாதார ஆய்வாளர்கள் திரு.S.பாஸ்கரனிடமிருந்து பணம் ரூ.5,760/-, திரு.K.தியாகராஜனிடமிருந்து பணம் ரூ.61,900/-, திரு.R.ஞானசேகரனிட-மிருந்து பணம் ரூ.12,300/- மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் திரு.K.வேணுகோபாலிடமிருந்து பணம் ரூ.12,100/-, இளநிலை உதவியாளர் திரு.G.சக்திவேலிடமிருந்து பணம் ரூ.11,140/- ஆகியோர்களிடமிருந்து பணம் மொத்தம் ரூ.1,03,200/- கைப்பற்றப்பட்டது. அப்போது இந்த திடீர் தணிக்கை சம்மந்தமாக செயல்முறை ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த புகாருடன் செயல்முறையினையும், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,03,200/-ம் தங்களிடம் இன்று (29.02.2020) 21.00 மணிக்கு ஆஜர் செய்கிறேன். உதகமண்டலம் நகராட்சி அலுவலக வளாகத்தில் இருக்கும் பொது சுகாதாரப்பிரிவு சுகாதார ஆய்வாளர்கள் 1) திரு.S.பாஸ்கரன், 2) K.தியாகராஜன், 3) R.ஞானசேகரன் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் 4) K.வேணுகோபால் 5) இளநிலை உதவியாளர் திரு.G.சக்திவேல் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் H.பிரகாஷ் 29/02/2020. Submitted: Received the above typed complaint along with the

29/2/2020

proceedings and cash Rs.1,03,200/- on 29.02.2020 at 21.00 hrs and registered a case in The Nilgiris VAC Cr.No.1/2020 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 r/w Sec.102 Cr.PC. ஒப்பம் கீதாலட்சுமி 29/2/2020 Inspector of Police, V&AC, The Nilgiris. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of the Surprise Check conducted on 29.02.2020 between 17.00 hrs and 20.00 hrs at Sanitary Inspectors office, General Health Section, Office of the Municipal Commissioner, Udhagamandalam Municipality, Commissioner road, Udhagamandalam, the Nilgiris District. முன்னிலை: 1) திரு.H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 29.02.2020-ஆம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), பொறுப்பு மாவட்ட மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம் திரு.H.பிரகாஷ் ஆகிய நான், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி என்பவருடன் பார்ட்டி சகிதம், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், கமிஷனர் சாலை, நகராட்சி அலுவலகம், பொது சுகாதாரப் பிரிவு அலுவலகத்தில் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்கள் உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள மளிகை கடைகள், சில்லறை கடைகள், பேக்கரிகள், உணவு விடுதிகள்,

Geethalakshmi
29/2/2020

தங்கும் விடுதிகள், ஆவின் பூத்கள், துணிக்கடைகள் மற்றும் சில்லரை விற்பனை கடைகள் ஆகியவற்றிற்கு அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க சான்றிதழ் (D & O License) பெற இன்று 29.02.2019 கடைசி நாள் என்பதால், மேற்கண்ட ஸ்தாபனங்களின் உரிமையாளர்களிடம் லஞ்சம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் பொது சுகாதார பிரிவு, துப்புரவு ஆய்வாளர்களின் அலுவலகத்தில் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. நகராட்சி ஆணையாளர் அலுவலகத்திலுள்ள துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் நுழைவாயில் மேற்கு பார்த்தவாறு உள்ளது. நுழைவாயிலின் உள்ளே நுழைந்தவுடன் இருந்த இருக்கையில் துப்புரவு ஆய்வாளர் திருமதி.[illegible] அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து அவருடைய கைப்பையிலிருந்து பணம் ரூ.160/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் சுகாதார ஆய்வாளர் திரு.K.தியாகராஜன் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் வலதுபக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.61,900/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அந்த பணம் ரூ.61,900/- D & O License பெற வந்தவர்களிடம் இருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்பதால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த கேபின் அறையில் இருந்த சுகாதார ஆய்வாளர் திரு.M.மகாராஜனை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்த பணம் ரூ.250/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக

அவருக்கு வலது புறமாக இருந்த கேபின் அறையில் சுகாதார ஆய்வாளர் திரு.S.பாஸ்கரன் அமர்ந்திருந்தார். அவரை விசாரிக்க அவர் தானாக முன்வந்து தன்னுடைய ஜெர்கினின் உள் இடதுபுற பாக்கெட்டிலிருந்த பணம் ரூ.5,760/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தப்பற்றி கேட்க சரியான முகாந்திரம் சொல்லாததால் அந்த பணம் ரூ.5,760/- D & O license பெற வந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட லஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக பாஸ்கரனுக்கு வலது புறமாக இருந்த கேபின் அறையில் சுகாதார ஆய்வாளர் திரு.R.ஞானசேகரன் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து அவருடைய பேண்டின் வலதுபக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.12,300/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் சொல்லாததால் அந்த பணம் ரூ.12,300/- D & O license பெற வந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட லஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஞானசேகருக்கு எதிர்புறமாக இருந்த இருக்கையில் தற்காலிக பணியாளர் செல்வி.ப்ரியா அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய ஹேண்ட் பேக்கிலிருந்த பணம் ரூ.8,260/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அந்த பணம் அவருடைய நகையை அடகு வைத்ததை மீட்பதற்காக வைத்திருந்த சொந்த பணம் என்று சொன்னார். உரிய ரசீதையும் காண்பித்தார். எனவே அந்த பணம் ரூ.8,260/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. சுகாதர ஆய்வாளர்கள் அறையின் நுழைவாயிலின் இடதுபுறம் இருந்த கணினி மேசை இருக்கையில் இளநிலை

Geethalakshmi
29/2/2020

உதவியாளர் திரு.G.சக்திவேல் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய மேசையின் அடிப்புறத்தில் இருந்த அலமாரியில் இருந்து பணம் ரூ.11,140/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் சொல்லாததால் அந்த பணம் ரூ.11,140/- D & O license பெற வந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட லஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. சத்திவேல் இருக்கைக்கு அருகில் அமர்ந்திருந்த Data entry Operator திரு.M.ராமூர்த்தி என்பவரை தணிக்கை அவர் தானாக முன்வந்து தன்னுடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5,630/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்றும் நேற்று SBI ATM-ல் எடுத்ததாகவும் கூறியதால், அப்பணம் ரூ.5,630/- அவரிடமே கொடுக்கப்பட்டது. சக்திவேல் அமர்ந்திருந்த இருக்கைக்கு இடதுபுறமாக பின்புறம் இருந்த இருக்கையில் தற்காலிக பணியாளர் திருமதி.ப்ரீத்தா என்பவர் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து அவருடைய ஹேண்ட் பேக்கிலிருந்த பணம் ரூ.16,620/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அது அவருடைய ஜனவரி மாத சம்பளம் என்று கூறியதால், விசாரணைக்கு பிறகு அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் பொது சுகாதார பிரிவு அலுவலகத்திலிருந்த K.வேணுகோபால் என்பவரை விசாரிக்க அவர் தான் உதகமண்டலம் நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு கண்காணிப்பாளராக இருப்பதாக கூறினார். அவரை விசாரிக்க அவர் முன்னுக்குப்பின் முறனாக பதில் அளித்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய ஜெர்கினின் உட்புற இடதுபுற பாக்கெட்டிலிருந்த பணம்

29/2/2020

ரூ.12,100/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க சரியான முகாந்திரம் கூறாததால், அந்த பணம் ரூ.12,100/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது பொது சுகாதரப் பிரிவு, நகராட்சி அலுவலகத்திலிருந்து கீழ்கண்ட ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 1) நகர் நல அலுவலர் அவர்கள் இன்று (29.02.2020) பொது சுகாதார பிரிவு சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்கள் வேலை பார்த்ததற்கான கடிதம், 2) ஒப்பம் செய்யப்பட்ட புதியதாக அச்சம் மற்றும் அருவறுக்கத்தக்க உரிமத்திற்கான (D & O license) மனுவின் பட்டியல்கள் ஆகியவை. இந்த திடீர் தணிக்கையானது இன்று 29.02.2020 17.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது பொது சுகாதார பிரிவு அலுவலர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கை செயல்முறையில் மாவட்ட ஆய்வு குழு அலுவலர் பொறுப்பு திரு.H.பிரகாஷ், நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி, இளநிலை உதவியாளர் K.சக்திவேல், சுகாதார ஆய்வாளர்கள் திரு.பாஸ்கரன், தியாகராஜன், வேணுகோபால், சுகாதார மேற்பார்வையாளர் திரு.வேணுகோபால் ஆகியோர் கையொப்பம் செய்தனர். இந்த திடீர் தணிக்கை செயல்முறையானது தலைமை காவலர் திரு.நா.சக்தி என்பவர் லேப்டாபில் தட்டச்சு செய்தார். நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 29.02.2020-ம் தேதி இரவு 21.00 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2020/AC/NI சட்ட பிரிவு 7 of PC (Amendment) Act, 2018 r/w 102 Cr.PC-படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின்

Geethalakshmi
29/2/2020

அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,03,200/- (ரூபாய் ஒரு இலட்சத்து மூவாயிரத்து இருநூறு மட்டும்) ஆகியவற்றை கணம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு சமர்பித்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

29/2/2020
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை
நீலகிரி மாவட்டம்